# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ருச] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷம் ஆடி மீ கஎ உ வெள்ளிக்கிழமை (1 AUGUST 1952) [இல - நக]


# கோயில் கொண்ட புலவர்களுட் சிலர்

## எழுத்தறிவித்து இறை ஆனோர்

இவ்வுடம்பு பிரமாவினுடைய படைப்பு. இதை விட்டு உயிர் நீங்கினால் இதற்கு ஒருபெருமையும் இல்லை. எல்லோரும் இதைப் பிணமென்று வெறுத்து ஒதுக்குவர். இது அழிந்துவிடும். ஆனால் இந்தக் கதியையடையாமல் என்றும் நிலைபெறுகின்ற படைப்பு யாதேனும் உண்டோ இல்லையோ என்று ஆராய்ந்து பார்த்தால் உண்டென்பது புலப்படும். எக்காலத்தும் எவர்க்கும் பயன்படக்கூடிய நூல்கள் ஒருபோதும் மாய்வதில்லை. அவைகளைப் படைத்த புலவர்களும் புகழுடம்பு பெற்று உலகுள்ளளவும் வாழ்ந்தே வருகின்றனர். பிரமாவுக்கோ கோயில் இல்லை, புலவர்கள் பலருக்குக் கோயிலுமுண்டு. அவருட் சிலரை இங்கே எடுத்துக் காட்டுவோம்.

### 'தமிழ்முனி'

புலவரொடு புலவராயிருந்து தமிழ் வளர்த்த இறைவனார், முருகவேள் என்னும் இவர்களுடைய கோயில்களைப்பற்றி நாமொன்றும் கூற வேண்டியதில்லை. இவர்களுக்கு அடுத்தபடியிலுள்ளவர் இவர்களுடைய மாணாக்கர் அகத்தியர். தமிழ் மொழிக்கு இலக்கண வரம்பு செய்து "தமிழ் முனி" என்ற சிறப்புப் பெயர் தாங்கியவர். தமிழ்நாடு எத்தனையோ வைத்திய நூல்களையும் அவருடைய தலையிலே சுமத்தியிருக்கிறது. அவருக்குத் திருவுருவச் சிலைகள் சிதம்பரம் வேதாரணியம் முதலான தமிழ்நாட்டுத் தலங்களிலன்றி ஜாவா முதலான பிற இடங்களிலும் இருக்கின்றன. இரண்டொரு வருஷத்திற்கு முன்பு இந்திய பிரதமர் பண்டித நேரு அவர்கள் இந்தோனேஷியாவுக்குப் போயிருந்தபோது சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் சிலவற்றிற்கும் போயிருந்தார். அவைகளுள் ஒன்றிலே அகத்தியர் திருவுருவச் சிலை ஒன்றைப் பார்வையிட்டபோது பிடித்த புகைப் படம் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் சிலவற்றிலே பிரசுரிக்கப்பட்டிருந்தது நம்மவருட் பலர் கண்டிருக்கக்கூடும். ஜாவா முதலிய விடங்களிலே அகத்தியருக்கு இக்காலத்து விசேஷ வழிபாடும் நடைபெற்று வருகின்றது. அங்கே அவருக்கு வழங்கிவரும் பெயர் "சிவகுரு" என்பதாம். மூற்காலத்திலே அந்த நாட்டிலே அவரது திருவுருவச் சிலைகள் கல்லினாலன்றிச் சந்தன மரத்தாலும் செய்து பிரதிட்டை செய்யப்பட்டு வந்தனவாம். அவர் வாசஞ் செய்த பொதிகை மலையிலே சந்தன மரங்கள் செறிந்திருந்தபடியால் அப்படிச் செய்தலும் பொருத்தமேயாகும். தமிழருடைய நாகரிகம் எங்கெங்கே பரந்திருந்ததோ அங்கெல்லாம் தமிழருடைய வழிபாடும் புகுந்துகொண்டது ஆச்சரியமன்று.

எங்கள் நாடாகிய இவ்விலங்கையிலும் அகத்தியருடைய திருவுருவச் சிலைகள் என்று கருதப்பட்டு வரும் சிலைகளுண்டு. அவை இப்போது கண்டு களித்தற்குரிய காட்சிப் பொருளளவில் மாத்திரமிருக்கின்றன.

### ஒழுக்கநூல் தந்த முதுபிராட்டி

அகத்தியருக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாட்டிலே சிறுவர்முதல் வயோதிகரீறாக எல்லோரும் அறிந்திருப்பது ஒளவையார். பள்ளிக்கூடத்திற்குப்போய் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் நல்வழி முதலிய நீதிநூல்களைப் படித்து அவைகளின் "கருத்தா" ஒளவையாராம் என்று உபாத்தியாயர்மூலம் அறியுமுன்பே, வீட்டிலே குழந்தைப் பருவத்திலே சோறூட்டும்பொழுது தாய்மார் அம்புலிமானுக்குள்ளே ஒளவையார் கிழவியைக் காட்டிக் கொடுத்து விடுகிறார்களே! யார்தான் அவரை அறியாமலிருக்க முடியும்!! பொன்னை வாரியிறைக்கும் மன்னர் பிரபுக்கள் மீதன்றிக் கூழ்கொடுத்துப் பசி தணிக்கும் வறியோர்மீதும் கவிபாடி மகிழ்ந்த ஒளவையார் பாடிக்குவித்த தனிப்பாடல்களுக்கு அளவில்லை. இந்த நீதி நூல்களையும் தனிக்கவிதைகளையுந் தவிர விநாயகரகவல், அசதிக்கோவை, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து, பந்தனந்தாதி, நான்மணிமாலை, ஞானக்குறள் என்னும் அரிய நூல்களையும் அவர் செய்துள்ளார். அவருக்குக்கோயிலொன்று தஞ்சை ஜில்லாவிலே வளவனாற்றின் கீழ்க்கரையிலே திருவிடும்பாவனம் என்ற ஊருக்குக் கீழ்த்திசையிலே துளசியார்பட்டி என்ற ஊரிலிருக்கிறதாம். இதில் ஒளவையார் வடிவு விருத்தவடிவாய்த் தலைஞ்சரிந்த முகத்திரைந்து காணப்படுகின்றதாம்.

இந்த ஒளவையாரது சகோதரருள் ஒருவர் திருவள்ளுவர். அவரியற்றின தெய்வத் திருக்குறளை உலகம் முழுவதுமே உச்சியில் வைத்துப் போற்றுகின்றது. அவரது கோயில் அவர் சமாதியடைந்த திருமயிலாப்பூரில் அமைந்திருக்கின்றது. இவரது புகழைப் பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு" என்று தமிழ்நாட்டுக்கே ஒரு தனிப்பெருமையைக் கொடுக்கின்றார்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### திரு. ச. குஹசோதி

அரசாங்க சமாச்சாரப் பகுதி

# ஸ்ரீ முன்னேஸ்வர மகோற்சவம்

ஸ்ரீ முன்னேஸ்வர வடிவாம்பிகாசமேத முன்னைநாதசுவாமி கோவிலில் ஆடி மாதம் 23 உ (7-8-52) வியாழக்கிழமை கொடியேறி வழக்கப்படி உற்சவங்கள் நடைபெறுமென மேற்படி ஆதீன பரிபாலன கர்த்தாவர்கள் அறியத் தருகின்றனர்.

விசேஷ குறிப்புகள்

ஆவணி 14 உ (29-8-52) சிவனடியார் திருவிழா, 15 உ பிக்ஷாடனர் திருவிழா, 16உ கடேசர் திருவிழா, 17உ வேட்டைத் திருவிழா, 18உ தேர்த் திருவிழா, 19உ தீர்த்தத் திருவிழா.

# மறவன்புலோவில் சுகாதார வாரமும் பெற்றோர் தினமும்

மேற்படி கொண்டாட்டங்கள் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் 25-7-52 வெள்ளி பிற்பகல் மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ந. பொன்னம்பலம் அவர்கள தலைமையில் ஆரம்பமாயின. அத்தருணம் கல்விவாரம் சுகாதார வாரம் என்னும் பொருள்களில் முறையே ஆசிரியர் திரு. மார்க்கண்டு அவர்களும் ஆசிரியை திருமதி நாகேஸ்வரி செல்லையா அவர்களும் பேசினர்.

## கேதீச்சரம் அடைமின்னே!

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லவியின் கரையிற்கே
தீச்சர மடைமின்னே.

அரசியல் அலை

# களவில் நுழைபவர்களாற் கவலை

## அரசாங்கம் அலமரவேண்டியதேன்?

## ஆள்இனம் காட்டும் அறிகுறிச் சீட்டுகள்

பலபட்டடை விவாதம் என்றால வருடாந்த வரவு செலவுத் திட்டம் ஆராயப்பெறும்போதுதான் காணலாம். ஒருநாட்டின் நன்மை தீமையைப்பற்றி எல்லாம சொற் பெருக்கு நீரூற்றுபோன்று ஓடிக்கொண்டிருக்கும்!

இந்திய நாட்டிலிருந்து இத்தீபகத்துக்குக் கள்ள மார்க்கமாக வருகின்றவர்கள் தொகைநாளுக்குநாள் கூடிக்கொண்டேவருகின்றதென்றது பலரறிந்த இரகசியம். இந்த வில்லங்கத்தைத் தடுக்க அரசாங்கத்தார் ஆனமட்டும் முயன்றும் அடைந்தாரில்லை நற்பயன். காரணம்! வேலி பயிரை மேயும் விபரீதமே. இந்த உள் ஆள் கள்ள ஆளாகும நிலைமையையும் விலக்கக் கூடிய வழிவகையில்லையா?

காலித் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் 'கேலி'யாகப் பேசுபவர் என்றதுண்மையெனினும் அவர் சாலச்சிறந்த புத்திநுட்பமானவற்றைப் புகட்டிவிடுவது வழக்கம். அரசாங்க சபையிலே இத்தகைய [illegible] இறங்க வொட்டாது தடுப்பதற்கு ஆள் இனம் அறிவிக்கும் சீட்டுகள் ஒவ்வொருவருக்கும வழங்கப்பெற வேண்டும என்று ஒரு தீர்மானத்தைத் திரு. தகநாயக கொண்டுவந்ததும் அது அங்கீகரிக்கப்படாததும் பழையகதை. ஆனாற் பாராளுமன்றத்திலே அதேவித தீர்மானம அவராற் கொணரப்பெற்ற பொழுது அங்கீகாரம்பெறவில்லை என்று திரு. தகநாயக குற்றஞ்சாட்டினர்.

அரசாங்கம் இவ்விதமாக எதிர்க்கட்சியினர் கொண்டுவரும எல்லாத் தீர்மானங்களையுந் தங்கள் வாக்குப் பலங்கொண்டு தள்ளிவிடுவது சனநாயகமன்று. "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பதை அரசாங்கக் கட்சியினர் அறியார்போலும்!

திருத்தொண்டர் திருநாள்

# உடல் உதிரத்தாலே திருவிளக்கேற்ற உளங்கொண்டார்

## விழுத்தொண்டு விளக்கிட்ட கலிய நாயனார்

தொண்டைமண்டலத்திலேதிருவொற்றியூரிலே சக்கரப்பாடியிலே செக்காட்டுவோர் குலத்திலே திருவவதாரஞ் செய்து பெருஞ் செல்வராகித் திருத்தொண்டுசெய்யும்பான்மையராய் ஆண்டுள்ள திருக்கோயிலிலே உள்ளும் புறமும் அல்லும் பகலும் திருவிளக்கேற்றி வாழ்ந்தார் கலிய நாயனார்.

திருவருளின்படி அவருடைய செல்வமொழிந்துபோகத் தம் சுற்றத்தவரிடம் எண்ணெய் வாங்கி விற்று அவர்கள் கொடாதபொழுது தாமே தொழில் செய்து கூலி வாங்கித் திருவிளக்கேற்றினார். தொழில் செய்வோர் தொகை பெருகத் தொழில் கிடையாமல் மனைவியைவிற்றுத் தொண்டைச் செய்ய முயன்றார் வாங்குவாரின்மையால் மனந்தளர்ந்து தன்னுடைய இரத்தத்தை விட்டெரிக்க நினைத்துக் கழுத்தை யரிந்தார். உடனே சிவபெருமான் அவருடைய கையைப் பிடித்து இடபாரூடராய்த் தோன்றியருளி ஊறு நீக்கிச் சிவபுரியிலே வாழும்பேற்றையருளிச் செய்தார்.

மற்றவர்தம் முன்னாக மழவிடைமேல் எழுந்தருள
உற்றவூ றதுநீங்கிஒளிவிளங்க உச்சியின்மேல்
பற்றியஅஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்
பொற்புடையசிவபுரியில்பொலிந் திருக்க அருள்புரிந்தார்.

# திருக்கேதீச்சரத் தண்ணீர்ப்பந்தல் மடம்

இற்றைக்குப் பதினெட்டு ஆண்டுகளாகத் திருக்கேதீஸ்வரத்தில வருடந்தோறும் நடைபெறும் சங்காபிஷேக காலத்தில் யாழ்ப்பாணவாசிகளும் மன்னாரில் வியாபாரஞ் செய்கின்றவர்களுமாகிய திருவாளர்கள் கி. நாராயணசாமி, பொன்னுத்துரை, மயில்வாகனம் ஆகியவர்கள சிறு கொட்டில்கள் அமைத்துப் பல அடியவர்களுக்குத் தண்ணீர் ஊற்றி வருகிறார்கள். இது பலருக்குத் தெரியும். தற்போது நாவலர் பெருமான் பேரில் ஒரு மடம் அமைத்து ஐந்து மாத காலமாகத் தண்ணீர் ஊற்றி வருகிறார்கள். தண்ணீரின்மையால் கஷ்டப்படும் திருக்கேதீஸ்வரத்தில் இத் தொண்டர்கள் செய்யும் பணி மிகவும் புண்ணியமாகும். ஆகையினால் சைவ நன்மக்கள் இத் தொண்டுக்கு உதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அர்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ ஆடி ௴
௧௨ வெள்ளிக்கிழமை

## கிளிநொச்சிக் கிராமத்துக்கோர் சைவப் பாடசாலை!

உலகில் இப்போது ஓங்கி வளர்ந்துவரும் தீவிர உலகாயதக் கொள்கை, மதங்களையெல்லாம் மறுக்கின்ற மனப்பான்மையை யுண்டுபண்ணுவது மல்லாமற் சமயங்களை வேரோடு களைந்துவிடவும் செய்துவிடும் என்று அநுபவம் வாய்ந்த அறிஞர்கள் அஞ்சி எங்கணும் சமயக் கல்வி தளராதுபயிற்றப்படவேண்டுமென்று கருதுகின்றனர். சமயக் கலாசாலைகளன்றி அரசினர் கலாசாலைகள் மதப்பற்றை உள்ளத்தில் ஊன்றிவிடக்கூடிய சக்தி வாய்ந்தன அல்லவென்று பெரியோர்கள் கூறுகின்றனர்- எனவே பச்சிளம் பாலர்கள் முதலாக வயது வந்தவர்கள் ஈறாக எவர்களும் தத்தம் சமயஉணர்ச்சியை ஊட்டுவிக்கும் பாடசாலைகளிற் கல்வி பயில வேண்டியது அவசியமாகின்றது.

காடாய்க் கிடந்த கரைச்சி துணுக்காய்ப்பகுதிகள் யாவும் நாடாகி நல்வளமுடையனவாகி வருகின்றமையும் அவ் விடங்களிலே யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் குடியேறி யிருக்கின்றமையும் பலரறிந்தனவே. நாடுகள் செழித் தோங்கவும நகரங்களாக வளரவும் ஆலயங்களும் கலாசாலைகளும் இன்றியமையாது வேண்டப்படுவன. பரந்தன் கிளிநொச்சிப் பகுதிகள் பரந்த நெற்கழனிகள் பொலிந்த ஊர்களாகத் திகழ்கின்றனவு மல்லாமல் குடிசனத்தாலும் பெருக்கமடைந்து வருகின்றன. எனவே இந்த இடங்களிலே சைவாலயங்கள் அமைக்கப்பட வேண்டும். இப்பொழுது கிளிநொச்சியிலே உள்ள சுப்பிரமணியப் பெருமான் ஆலயத் திருப்பணி வேலை செவ்வனே நடைபெறச்சைவாபிமானிதள் உதவி புரிதல் வேண்டும்.

இந்தப் பகுதிக்கு ஓர் சைவப் பாடசாலை இன்றியமையாது வேண்டப்படுகின்றது. கல்வி கற்கும் வயதுடைய நூற்றுக்கணக்கான சைவர்கள் இருக்கிறார்கள். தங்களுக்கெனவுள்ள ஓர் கலாசாலையிலே தங்கள் மதவழிபாட்டிலும் ஒழுக்கத்திலும் நின்றவரு இயலாதவர்களா யிருப்பது மல்லாமல், கல்வி கற்க வேண்டிய அவசியத்தினிமித்தம் அந்நியமத பாடசாலைகளிலும் சமயப்பற்றற்ற அரசாங்கக் கலாசாலைகளிலும் பயிலவேண்டிய நெருக்கடியான நிலைமையிலும் இருக்கின்றார்கள். ஆனல் இந்த இடத்தில் ஓர் சைவப் பாடசாலையை நிறுவிச்சைவசீலத்தை இந்த இளஞ் சிறார்களுக்கு மாத்திரமன்று இவர்கள் பெற்றார்கள் உற்றார்களுக்கும் உணர்த்தி வைக்கக் கூடிய ஒரு தரும கைங்கரியத்தைச் செய்துதவச் சைவாபிமானிகளாவது சைவ சங்கங்களாவது இதுவரை எண்ணாது வாளா விருக்கின்றமை பெரிதும் கவலைக் கிடமாகின்றது. சைவம் செழித்தல் வேண்டும், தமிழ் வளரவேண்டும் என்று வாய் வேதாந்தம் பேசிவிட்டு ஆண்டுக்கொரு முறையோ இருமுறையோ கூடி புத்திக்கெட்டிய பல நிர்ணயங்களை எல்லாம் நிறைவேற்றிவிட்டுச் சைவத்தொண்டாற்றி வருகின்றோம் என்று அறிக்கைகளை அச்சிடுவிப்பதும் அலங்கார ஆண்டு விழாக்கள் நிகழ்த்துவதுமே சைவப் பணியென்று எண்ணுகின்றவர்கள்பொழுதையும் பொருளையும் வீண்விரயஞ் செய்கின்றார்களே அன்றி வேறென்புரிகின்னறனர்? தமிழ்த் தொண்டு சைவத் தொண்டென நன்கு அறிந்த நாவல நற்றகையார் சைவக் கல்வி பரவவேண்டு மென்று ஆற்றிய அரும்பணியில் அணுவளவேனும் இப்போதைய சைவாபிமானிகள் செய்கின்றனரா? அப் பெருந்தகையாருக்குப் பின் கொடையாளர் இராமநாத வள்ளல் சைவாலயங்களும் சைவ கல சாலைகளும் அமைத்துச் செய்த பெருந்தொண்டில் ஒரு இம்மியளவேனும் இன்றைய சைவாபிமானிகள் இயற்றுகின்றனரா? இல்லை என்றே கூறலாம். சைவபரிபாலனசபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் முதலிய சைவக் கழகங்கள் இப்பெரும் புண்ணிய கைங்கரியத்தைச் செயது கொண்டு வருகின்றனவேனும் சைவப் பிள்ளைகளின் தேவைகள் அதிகரித்துவரும் இந்நாட்களில் இச்சங்கங்களின் முயற்சிகள் பன்மடங்கு பெருக்கப் படவேண்டும்.

கிளிநொச்சிக் கிராமத்திலே நிரந்தரமாகக் குடியேறியவர்களும் தொழில் முயற்சிக்காக இருக்கின்றவர்களுமாக உள்ள சைவர்கள் பெருந்தொகையினருக்கு ஒரு சைவ ஆலயமும் சைவக் கலாசாலையும இன்றியமையாது வேண்டப்படுவன, இப்பொழுது சுப்பிரமணியப் பெருமான ஆலயம் ஒன்று நிறுவப்பெற்று அரைகுறையா யிருக்கின்றது. சைவப் பாடசாலை இன்னமும் நிறுவப்படவில்லை. இக்கிராமத்தில் இப்பொழுது அருந்தொண்டாற்றி வரும் சைவ அபிவிருத்திச் சங்கத்துக்கு ஆதரவு போதியதாயில்லை. அபிமானிகள் பலர் உளரேனும் பொருட் பெருக்கம் பெரிதாயில்லை, இச்சங்கத்தின் நன்முயற்சிகள் பய[illegible]னளிக்கும் வண்ணம் சைவபரிபாலனசபையார் அல்லது சைவவித்திபா விருத்திச் சங்கத்தார் சைவக்கலாசாலை அமைக்குந் தொண்டிற் பங்கு பற்றி இப்பகுதியிலுள்ள சைவச்சிறார்கள் தங்கள் மதப் பாடசாலைகளிற் கல்வி பயின்று சைவ வாழ்வின் ஒழுக்க வழக்கங்களை உள்ளத் தமர்த்தக் கூடிய [illegible] பமாகி ஒழுக உதவி புரிவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

# வாமனெடு வழக்காடிய வன்றொண்டர்

## அடியார்க்கு அடியன் ஆகிய குரவர்

உலகம் உய்யும்படி திருத்தொண்டத்தொகை அருளிச் செய்தவர் சுந்தரமூர்த்திசுவாமிகள். திருக்கைலாச மலையிலே உமாதேவியாரோடும் எழுந்தருளி இருக்கின்ற சிவபெருமானது அடியார் கூட்டத்தில் ஒருவராய் இருந்தவர் ஆலாலசுந்தரர்எனப்படுவார். அவர் மாதர்மேல் மனம் வைத்தமையால தமிழ் நாட்டிலே திருநாவலூரிலே ஆதிசைவராகிய சிவ பிராமண குடியிலே சடையனர் இசைஞானியார் என்போருக்குப் புதல்வராய் அவதாரஞ்செய்தார்.

மாதவஞ் செய்த தென்றிசை
வாழ்ந்திடத்
தீதிலாத்திருத் தொண்டத்
தொகைதரப்
போதுவாரவர்மேன்மனம்போக்
கிடக்
காதல் மாதருங் காட்சியிற் கண்
ணினர்.

என்று சேக்கிழார் பெருமான் அருளியிருக்கின்றார், தமிழ்நாட்டோர் பெருந் தவஞ்செய்தமையால் அவர்களை வாழ வைக்கவே ஆலால சுந்தரர் நம்பியாரூராக அவதரித்தார்.

### இறைவன் இன்னருள்

நம்பியாரூர் தெருவிலே சிறு தேருருட்டி விளையாடுகின்றார் நரசிங்க முனையர் என்ற அரசர் கண்டு காதலால் அபிமான புத்திரராகப் பெற்றுவளர்த்தார். அரசர் மனையிலே வளர்ந்ததோடு தமது வைதிக வாழ்வும் உடையராய் உபநயனம் பெற்றார். விவாகஞ் செய்தற்குரிய பருவம் எய்தினர். சடங்கவி சிவாசாரியாது மகளை மணஞ் செய்து வைக்க இருமுதுகுரவர்களும் சுற்றத்தார் முதலிய பெரியார்களும் நிச்சயஞ் செய்தார்கள். மணமகளது இல்லத்தில் மணவணியுடன் மணச் சடங்குகள் செய்யும்முறையில் நம்பியாரூரர் இருந்தார், அங்கேயே சிவவேதியராகச் சென்று சிவபெருமான் தடுத்தாட்கொண்டார். வன்றொண்டர் என்ற நாமம் ஆரூரருக்கு உண்டாயது.

பண்டிதர் கா. நமசிவாயம்
ஆசிரியர்

திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் திருத்தொண்டர்கள் இருப்பதனைக் கண்டார். சண்டரூரார் அவர்கட்குத் தொண்டனாக ஆகும் நாள் என்றோ? என எண்ணினர். கண்ணுதற்கடவுள் காட்சி கொடுத்து சுந்தரனே அடியவர் பெருமையைக் கேள். பெருமையால் தம்மையொப்பார் பேணலால் எம்மைப்பெற்றார். ஒருமையால் உலகைவெல்வார் ஊனமேல் ஒன்றுமில்லார் கருமையாம்நிலையில் நின்றார் அன்பினல் இன்பமார்வார் இருமையுங் கடந்துநின்றார் இவரை நீ யடைவாயென்று அருள்புரிந்து அடியார்களைப் பாடும்படி பணித்தார். தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று பரம்பொருளே அடியெடுத்துத் கொடுக்க ஆரூரர் திருத்தொண்டத் தொகை பாடியருளினர். இதுவுந் திருத்தொண்டர் திருவந்தாதியுமே பெரியபுராணம் பாட, சேக்கிழாருக்கு முதனூல் வழிநூல்களாய் அமைந்தன.

### ஊழ் வலிமை

கமலினியார் திருவாரூரில் பரவையார் என்னும் பெயர்பூண்டு அவதரித்திருந்தார் திருவாரூர்ப் பெருமானை வணங்கிய சுந்தரர் பரவையாரைக் கண்டு காதல்கொண்டார் தன் மனங்கொண்ட இளங் கொடியார்? என்று வினவினர். முன்னின்றோர் அவர் நங்கை பரவையார் என்றார்கள்.

'பேர்பரவை பெண்மையினிற்
பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை யணிதிகழு
மணிமுறுவ லரும்பரவை
சீர்பரவை யாயினு
டிருவுருவின் மென்சாயல்
வர்பரவை யிடைப்பட்ட
வென்னுசை யெழுபரவை,'

என்ற இவ்வாறு பலவும் நினைந்து கோயில் உள்ளே சென்று வழிபட்டு மீண்டார். பரவையாரும் வழிபட்டு மீண்டார், ஒரு பாட்டில் எழுபரவை வரப்பாடிய புலமை கவிஞர்களாற் போற்றப்பட்டுள்ளது, கண்ணுதல் அருளால் விவாகம் நிறைவேறிற்று. சுந்தரர் பரவையார்பால் பன்னுளும பயில் யோகம் பரம்பரையின் விரும்பினர்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## கிளிநொச்சியிற் சுந்தரமூர்த்திகள் குருபூசை

கிளிநொச்சிச் சைவ அபிவிருத்திச்சங்க ஆதரவின் கீழ் வழமைபோலச் சமய குரவர் குருபூசை சென்றபுதன்கிழமை மாலை 7-30 மணியளவிற் கொண்டாடப்பட்டது.

அவ்வமயம் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்ந்தபின் ஆயுர்வேத வைத்தியர் திரு. சி. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கிளிநொச்சிப் பகுதிக்கொரு சைவப்பாடசாலை அத்தியாவசியகம் என்று தலைவர் குறிப்பிட்டுக் கிராமவாசிகளைச் சைவத் தொண்டு புரியும்வண்ணம் பரிந்து கேட்டார். பின்னர் திரு R. N. சிவப்பிரகாசம் அவர்கள் சுந்தரமூர்த்திநாயனர் சரித்திரத்திலுள்ள முக்கிய அம்சங்களை எடுத்துக்காட்டி அவை உலகியலில் எவ்வாறு பொருந்துகின்றனவென்றும் சைவவாழ்வுக்கின்றியமையாது வேண்டப்படுவது வழிபாடும் இறைவன்பால் இடையறாத அன்பு கொள்ளல் என்றும் புலவ் வழிப் போகும் அவர்களும் பரம்பரனுக்கும் சிவனடியார்களுக்கும மெய்யன்பராலுற் கடைத்தேற் இறைவனருளடையலா மென்றும் இத்தகைய சிவனடியார் வாழ்க்கை விபரங்களையெல்லாம் சிறு சிறு பாடப் புததகங்களாக்கி அவற்றிலே அறநெறிக்குரியஎடுததுக் காட்டுக்களை ஒழுக்கஉபதேசமுறையில் எழுதிச்சைவமாணவர்கள் கற்பதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படல்வேண்டுமென்று கூறி ஈற்றில் கிளிநொச்சிப்பகுதிக்கொரு சைவப் பாடசாலை இதுவரை நிறுவப்படாதிருப்பது சைவ உலகிற்கே ஒரு வழுவென்றும் அக்குறையை நீக்கச் சைவசங்கங்களும் அபிமானிகளும் காலந்தாழ்த்தாது முன்வரவேண்டுமென்றும் இவ்விஷயத்திற் கிளிநொச்சிச்சைவ அபிவிருத்திச் சங்கஞ் செய்து வரும் அரும்பணி எவராலும் போற்றப்பட வேண்டுமென்றும் சொற்பொழிவிற் குறிப்பிட்டார்.

தலைவர் குறிப்புரை நன்றியுரையுடன் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானுக்கு ஆராதனை ஆகிக் கூட்டம் இனிது நிறைவேறியது.

## காந்தி ஊழியர்களுக்கு இரண்டு வருடப் பயிற்சி

தமிழ்நாடு காந்திநிதியின் ஆதரவில் 16–8–52 ல் மதுரைஜில்லாவில் சின்னாளப்பட்டி காந்திக்கிராமத்தில் உள்ள ஊழியரகததில் இரண்டுவருட கிராம ஊழியர் பயிற்சிமுகாம் ஆரம்பமாகும், பயிற்சி பெறுவோர் சேவாமனப்பான்மையும் தியாக உணர்ச்சியும் உடையவர்களாகஇருக்கவேண்டும். கடின உழைப்பில் ஈடுபடுவதற்குரிய நல்ல தேகாரோக்கியம் இருக்கவேண்டும். இலங்கையில் ஜே. எஸ். ஸி. அல்லது எஸ். எஸ். ஸி. அல்லது அதற்குத் தகுந்த பொது அறிவு உடையவர்களாக இருக்கவேண்டும். வயது 18 க்கும் 25 க்கும் இடையில்இருக்கவேண்டும், வைத்தியப் பரீட்சையல் தேறியவர்கள் பயிற்சிக்கு எடுபடுவார்கள், பயிற்சி ஆரம்பித்த முதல் 6 மாதங்களுள் பயிறசிக்குத் தகுதியில்லாதவர்கள் நீககப்படுவார்கள்.

பயிற்சிக்காலத்தில் பயிற்சியாளர்களுக்குச் சாப்பாடு முதலிய செலவுகளுக்காக மாதம் 20/= ரூபா வீதம் செலவு கொடுக்கப்படும், பயிற்சி முடிந்தபின் பயிற்சியாளர்களின் தகுதி, திறமை, தேவை இவைகளை அனுசரித்து மாதம் ரூபா 75/= வரை சம்பளம் கொடுத்துக் காந்திய சேவைக்கு உபயோகப்படுத்தப்படும். குறைந்தது ஐந்து வருடத்துக்கு மேற் குறித்த நிதியின் ஆதரவில் இந்தியாவிலோ இலங்கையில் அகில இலங்கைக் காந்திய சேவாசங்கத்தின் ஆதரவிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ காந்திய சேவைசெய்யத் தம்மை அர்பணிப்பதாக உறுதிகூறி அதற்கான விண்ணப்பத்தில் மனுப் பண்ண வேண்டும். விண்ணப்பகாரரின் ஒழுக்கம் தகுதி முதலியவற்றை ருசுப்படுத்த இரண்டு முக்கியஸ்தர்களது கடிதங்கள் இணைக்கப்படவேண்டும. ஒரு வாரத்துக்கிடையில்:- காரியதரிசி, அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம், நீர்வேலி (P.O) என்ற விலாசத்துக்கு சம்மதமானோர் அறிவிக்க வேண்டும். என்று சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் தெரிவிக்கின்றார்.

### வரவு செலவுத் திட்டம்

1952-1953 அரசாங்கவரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தின அங்கீகாரத்தை இரண்டாம் முறையும் பெற்றிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர்கள் நெஞ்சம்

## ஆசிரிய அன்ப!

### மின்சூளொளி திருவிளக்காகுமா?

இது கலிகாலம். இதற்கொரு கோலமுண்டு. இக்காலத்தின் கோலத்தைக் கண்ட "கச்சியப்ப சிவாசாரியர்" ஒரு கதை சொல்லுகின்றார். அது இக் காலத்தின் கோலத்தைக் காட்டுகின்றது. அவர் சொல்லுகின்றார்:– "முன்னொரு காலத்திலே பாதல மத்திய சுவர்க்கங்களிலே சஞ்சரிக்கின்ற ஆன்மாக்கள் செய்த வினைப்பயன் ஏதுவாக ஆதியந்தமற்ற இறைவாக்காகிய மறைகள் அடிதலை தடுமாறிச் சிதறின. அவ்வேதுவால் முனிவர்களுந் தேவர்களும் அஞ்ஞான இருளிலமிழ்க்கினார்கள். அப்பொழுது மக்கள் தேவர் முனிவர் ஆகியோர் சிவஞான ஒளியிழந்தவராய் வேதநெறிக்கு மாறான தீமைகளைச் செய்தார்கள். அவற்றிற்கேற்ற அறிவுரைகளையும் செய்தார்கள். இக்கருத்து,

"முந்தோருகாலத்தில்
மூவுலகந்தன்னில்
வந்திடுமுயிர் செய்த
வல்வினையதனாலே
யந்தமில் மறையெல்லா
மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந்
தேவருமருளுற்றார்."

... ... ... ... ... ... ... ... ... ...

'ஆனதோர் பொழுதின்
கணமாரு முனிவோரு
மாநில மிசைவைகு
மக்களு மிறையுள்ள
ஞானமதிலாகி நவின்மறை
நெறிமாற்றித்
தீநெறி பலவாற்றிப்
பனுவல்கள்சிலசெய்தார்"

என்னும் செய்யுள்களிலே காணக் கிடக்கின்றது.

கச்சியப்பசிவாசாரியர் ......... கலிகால இயற்கையை நினைந்துதான் இப்படிச்சொன்னார்போலுய? சாதாரணமாக, ஒரு மனுஷனுடைய முகத்திலே மின்சூளொளியைப் பிடித்தால் அவன் கண் திறக்க முடியாதவனாய் வலியிழந்து தன் செயலற்று நிற்கிறான்! (அவ்வளவா?) அடுத்த கணப்பொழுதில் இத்தீச் செயலைச் செய்தவன்மீது கோபாவேசங்கொண்டு செல்கின்றான். கனம்பண்ணவேண்டிய ஒருவருடைய முகத்திலே ஒருபோதும் ஒருவன் ஒரு மின்சூளொளியைப் பிடிக்கமாட்டான். இது உலக அநுபவம். மறைநெறிக்கணவந்த உலக முறைகளுக்கேற்பவே இறைவழிபாட்டு முறைகளும் நடக்கின்றன. இப்படியிருக்க திருவிழாக்களிலே சுவாமியினுடைய "திருமுகத்திலே" மின்சூளொளி பிடிக்கப்படுகிறதே! இது எந்த வேதவிதிப்படி, எந்த உலகமுறைப்படி நடத்தப்படுகின்றதோ? முருகப் பெருமானுடைய திருக்கண்களினின்றும்வரும திருவருட்கருணை எமக்குவேண்டாமென்பதா இத்தீச் செயலின் கருத்து?

காலம் கலியுகமே யானாலும் கடவுளுடைய திருவருட் கருணையை வேண்டி நிற்கும் அடியார் இத்தீச் செயலை உடனே நிறபாட்டுதற்கு வேண்டிய முயற்சிகளைக் காலதாமதமின்றிக் கையாளுவாரென்று நம்புகிறேன்.

முருகதாசன்.

28–7–52.
நல்லூர்.

### வியாவிற் சைவபரிபால்ன சபை

எண்ணரிய பிறவிகளுள் அரிதாகிய மானுடப் பிறவியைப் பெற்றவர்கள் அடைய வேண்டிய அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் ஒருங்கே தரவல்லது கல்வியாகும். எம் சைவத்தையுந் தமிழையும் பரிபாலித்தற்காகத், திருவவதாரஞ் செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் எம் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் சைவ வித்தியாலயங்களை ஸ்தாபித்துள்ளார்கள். அதன் பயனாக வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயம் சென்ற விகிர்தி வருடம் (1890) ஆரம்பிக்கப் பெற்று சைவ சமயத்தையுந் தமிழையும் பரிபாலிக்கும்முறையிற் பெருந்தொண்டாற்றி வருகின்றது.

தற்பொழுது உயர்தர வகுப்புகளில் இலவசக் கல்வித் திட்டம் வந்ததன்மேல் பெண்கள் மாத்திரமே கற்றுவருகின்றனர். ஆகவே பெண்களுக்குரிய முறையில பண்டித வகுப்பு வரையிற் கல்வி கற்கத்தக்க ஒழுங்குகள் செய்யப்பெறுகின்றன. தமிழ்ப் பண்பாட்டைச் சரியான முறையிற் பிரகாசிக்கச் செய்வதற்கு ஷை பண்டித வகுப்பு சமீபத்தில் எதிரேவரும் விஜயதசமி தினத்தன்று ஆரம்பமாகும்.

இப்படியாகச் சைவ சமயத் தொண்டாற்றி வரும் இவ்வித்தியாலயத்தின் 60-ம் ஆண்டுப் பூர்த்திக் கொண்டாட்டம் நிகழும் நந்தன வருடம் ஆவணி மாதம் உக, உஉ, உங-ந் தேதிகளில் நடைபெறுவதற்குரிய முயற்சிகள நடைபெறுகின்றன. ஆறுமுகநாவலரின் உயரிய நோக்கங்களை ஆதரிக்கின்ற பேரன்பர்கள் இவ்வித்தியாசாலையின் முன்னேற்றத்திற்குரிய தங்களுடைய அபிப்பிராயங்களை எழுதித் துணைபுரிவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றுச் சைவமுந் தமிழும் பிரகாசிக்கச் செய்ய எம சைவப் பெரியார்களாகிய சேர் வைத்தியலிங்கம் துரைசாமி, ஸ்ரீமான் சு. சிவபாத சுந்தரம்பிள்ளை முதலிய பேரறிஞர்கள் சமுகந் கொடுத்து எம உயரிய நோக்கங்கள இனிது நிறை வேற ஆசீர்வதிப்பார்களென எதிர் பார்க்கப்படுகின்றது.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பெருங்கருணைப் பரம்பொருள் பேரருள் புரிவதாக

இங்ஙனம்
இ. நாகலிங்கம்
மனேஜர்
வியாவில் காரைநகர்

### மத்தியமாகாணச் சைவமகாசபை

மேற்படி சபை மண்டபத்தில சபையின் ஆதரவில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை 30-7-52-ல் கொண்டாடப் பட்டது. அப்பொழுது "தம்பிரான் தோழர்" என்னும் பொருள் பற்றி வண்ணை ஸ்ரீ C. C. S. மணிஐயர் அவர்களாற் பின்னணி இசையுடன் சங்கீத உபந்நியாசம் நடாத்தப் பட்டது.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் கரம்பன் ஊர்காவற்றுறை வீ. தம்பிப்பிள்ளை அவர்களின் அடைவு கடையில் ஒரு வருஷத்திற்கு மேல் மீட்கப்படாதிருக்கும் பின்னாற் காணும் நகைகள் என்னல் 1952ஸூ ஆவணிமீ 23உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணிக்குப் பிரசித்த வலத்தில் விற்கப்படும்.

### அடைவு விபரம்

| அடைவு இல- | அடைவு திகதி | அடைவு வைத்தவர் | அடைவு நகை |
|---|---|---|---|
| 1184 | 30 11-50 | சியோன் சின்னத்தம்பி கார் றைவர் ஊர்காவற்றுறை | ஒரு சோடி காப்பு |
| 1371 | 21-12-50 | வயித்தியான் யோசேப்பு தேவமாதாவின் கோயில் ஊர்காவற்றுறை | ஒரு முறிந்த வளையல் ஒரு தாலி, சிலுவை. |
| 1555 | 13-1-51 | ஆறுமுகம் கந்தையா பலுகாடு காரைநகர் | ஒரு சோடி காப்பு. |
| 1904 | 17 2 51 | S. A. E. இரத்தினராசா கரம்பன், ஊர்காவற்றுறை | ஒரு சங்கிலி, |
| 2342 | 22-4-51 | கணபதி ராமன் சின்னமடு சரவணை | ஒரு தாலிக்கொடி தாலியில்லை |

காரைநகர்
28-7-52.

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer.

M. 87 29—7—52 & 1—8—52


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தாபனம்:
63, கன்னதிட்டி
யாழ்ப்பாணம்.


### வாமனெடு வழக்காடிய வன்றொண்டர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பொருள் பேரறிஞர்க்கே புலப்படுவதாகும்.

சங்கிலியார் திருமணம் இனிமையானபகுதி; இதில் உண்மையின் உயர்வு காட்டப்படுகிறது. சத்தியந்தவறி திருவாரூருக்குப் புறப்பட்டார். இறைவர் இருகண்களையம் மறைத்துவிட்டார். பின்னும் சுந்தரர் பெருமானையே பாடி, கண்களைப் பெற்றார். பரவையின் ஊடலை நீக்கவும் தம்மைப் பரவையாரோடு உறவாக்கவும் ஆண்டவனைத் தொழுது வேண்டினார். வேண்டியாங்கே எய்தினர். சுவாமிகளிடத்தில் நிகழ்ந்த அற்புதங்கள் பல. அவற்றுள் முதலையுண்ட பாலனை வாய்திறந்து கக்கச்செய்து அழைத்தது அதி அற்புதமாகும்.

'வறந்திடு பொய்கை
முனிரம்ப மற்றவன்
உறைந்திடு முதலை
வந்துதிப்ப அன்னதால்
இறந்திடு மகன்
வளர்த்தெய்தப் பாடலோன்
றறைந்திடு சுந்தரனடிகள்
போற்றுவாம்'

என்று கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் இதனையே கூறித் துதிக்கின்றார்.

பெரியபுராணக் காப்பியத் தலைவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மகிமைகளை அறியத் திருத்தொண்டர் புராணம் முழுமையும் படிக்க வேண்டும். அவரருளிய தேவாரப் பதிகங்களை ஓதி உணர வேண்டும், சிவபெருமானை வழிபடுகின்ற சைவர்களாகிய நாங்கள் சுவாமிகளின் மகிமைகளை உணர்ந்து பக்திசெய்தல் இன்றியமையாததாகும். ஆடிச் சோதி அவரது குருபூசைத் திருநாள். அத்தினத்தில் குருபூசை செய்தும் தேவார பாராயணம் நடாத்தியும் அவர் அற்புதக் கதைகளைக் கேட்டும் உய்வோமாக.

## உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 3—8—52——9—8—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்தவாரம் வண்டிகள் அதிக செலவையும் கோபத்தையும் உண்டாக்கக்கூடும். மனச் சமாதானமிராது. மாதாபக்க இனத்தவரால, தொந்தரவுமுண்டு. வாக்குவாதத் தன்மையை நீக்குக.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

வாரத்தின் முதலிரு நாட்கள் கவனமாய்க் கழிக்கவேண்டும் பண நட்டம், அவமானம், இரகசியப் பகைவர் தொந்தரவு ஆகியவற்றுக்கிடமுண்டு. வாரமிகுதி வியாபாரத்துக்கு நல்ல காலம். ஆனால மனச் சமாதானமிராது.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

வாரத்தின் முதலிரு நாட்களில், சில தகுந்த இலாபத்துக்கிடமுண்டு. திங்களிரவு, செவ்வாய். புதன் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார மிகுதி திருப்பவும் நல்ல காலமாகின்றது.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இந்த வாரம் தேகசுகம் விசேஷமாய்க் கவனிக்க வேண்டும். புதன் இரவு, வியாழன், வெள்ளி காலை மிகக் கூடாத காலம். இறுதி இரு நாட்களும் புது வியாபாரத்துக்கு நல்ல நாட்கள்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

இறுதி இருநாட்களுக தவிர இந்த வாரம் நல்விளைவைத்தரும். புது முயற்சிகள் சித்தியாகும். போட்டியிடுவோரை வெல்லுதலும் தனலாபமும் நிச்சயம். ஆனால் பெறுகின்ற பணம் முழுதும் செலவாகும்.

**கன்னிராசி** உத்திரம் 2 3 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இவ்வாரம் கவனமாக நடக்கவும். முயற்சிகள் சித்தியடைதல் நிச்சயம். ஆனால் பெரும முயற்சி செய்யவேணடும். கடைசி நேரம் வரையும வெற்றியைப்பற்றி நிச்சயமாயிருக்கமாட்டீர் வார இறுதிக்குமுன் ஒரு பகைவன் நண்பனாவான்.

**துலாம்** சித்திரை 3 4 பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

வாரத்தின் முதலிரு நாட்கள் சிறு கோபம் உண்டாக்ககூடும், செவ்வாய்க்குப் பின் பணநிலை, வியாபார நிலையங்களில், திருத்தமும் பெண்ணின நண்பரால் இலாபமும் நிச்சயம், மேலும் சில நாட்களுக்குத் தேசுகம தொந்தரவாயிருக்கும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்த வாரம் புது நண்பரில் அதிகம் தங்கியிருக்க வேண்டாம். பிதாவழி இனத்தவரும் தொந்தரவுண்டாக்கக்கூடும். வார இறுதிக்குமுன், உத்தியோக முறையிற் சிறு மாற்றத்திற்கு அல்லது பிரயாணத்திற்கு இடமுண்டு. வழக்கத்துக்கு மாறாக நண்பருக்கு உதவி செய்யப் போகவேண்டாம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்கிடமுண்டு. ஆனால் அவை எல்லாவற்றையும் தவிர்க்கக் கூடியதாயிருக்கும். போட்டியிடுவோரை வெல்லுதலும், புகழும நிச்சயம். புது முயற்சிகளைச் சில நாட்களுக்குப் பின்போடவும்.

**மகரராசி** உத்தாடம் 2,3,4ம் பாதம் திருவோணம அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்த வாரம் வரவு செலவைச் சமாளிப்பது கஷ்டமாயிருக்கும். வியாபாரத்திலும் கஷ்டகாலம், இரகசியப் பகைவர் தொந்தரவுண்டாக்கக்கூடும். ஆனால் அவற்றில் வெற்றியுண்டாகும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

இந்த வாரம் அவமானத்தைத் தவிர்த்தல் கஷ்டமாயிருக்கும். பணத்துறை அதிகம் நல்லாயிராது. ஆனால், சிறு திருத்தம் நிச்சயம். வக்குவாதத்தன்மையை நீக்குக.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்த வாரம் தேகசுகம் பெருஞ்சலனத்தையுண்டாக்கும். ஆனால் பெரும் அபாயகரமானதொன்றுமில்லை. சிறு அபாயத்துக்கிடமுண்டு. பணத்துறையில் நல்ல காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தொண்டர் திருநாள்

# திருவேடத்தைப் - - - பெரிது மதித்த சேரன்

## ஐந்தெழுத் தோதி அரன்பதி அடைந்தார்

சேரநாட்டிலே கொடுங்கோளூரிலே மகோதையென்னும் நகரத்திலே சேரமான் பெருமாள் நாயனார் திருவவதாரஞ் செய்தார். பெருமாக்கோதையார் என்பது இவரது பிள்ளைத் திருநாமம்.

இவர் உலகியல் அரசியல் வாழ்க்கையின் நிலையாமையை யுணர்ந்து சிவபெருமானுடைய திருவடியடைதலே நிலையான இன்பம் பயப்பதென்று கண்டு புலரிக்காலத்திலெழுந்து ஸ்நானம் பண்ணித் திருவெண்ணீறணிந்து திருநந்தனவனத்திலே பலதொண்டுகள்செய்து மலர் பறித்து மாலைகட்டித் திருவலகிடுதல் திருமெழுக்கிடுதல் முதலிய திருத்தொண்டுகள் செய்து மனமொருவழிப்பட்டுத் திருவருளில் திளைக்கச் செய்யுந் தோத்திரப் பாக்களைப் பாடிப்பணிந்து திருவஞ்சைக்களத்திலே வதிந்து வருவாராயினர்.

'உலகின்இயல்பும் அரசியல்பும்
உறுதியல்ல' என உணர்வார்
புலரி எழுந்து புனல் மூழ்கிப்
புனித வெண்ணீற் றினும் மூழ்கி
நிலவு திருநந் தனவனத்து நீடும்
பணிகள் பல செய்து
மலரு முகையும் கொணர்ந்து திரு
மாலைசாத்த மகிழ்ந்தமைத்து.
"திருமஞ் சனமும்கொணர்ந்து திரு
வலகும் இட்டுத் திருமெழுக்கு
விரும்அன் புடன் இன் புறச்சாத்தி
மற்றுமஉள்ள திருப்பணிகள்
பெருமை பிறகைச்செய்தமைத்துப்
பேணும்விருப்பில் திருப்பாட்டும்
ஒருமை நெறியின் உணர்வுவர
ஓதிப்பணிந்தே ஒழுகுநாள்.

அக்காலத்தில் செங்கொற்பொறையன் என்னுஞ் சேர மகாராசா நித்தியா நித்திய வஸ்து விவேக முடையராய் முத்தியின்பம் பெற முயலும் பொருட்டு அரசபதவியை நீத்துத் தபோவனத்தை யடைந்தார். மந்திரிமார் பெருமாக்கோதையாரையடைந்து அரசபதவியை உரிமைப்படி ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். பெருமாக்கோதையார் சிவபெருமானுடைய திருவருளின்படி உடன்பட்டார்.

### வண்ணானை வணங்குதல்

ஒரு சுபதினத்திலே முடிசூட்டப்பெற்றுச் சிவபெருமானைவழிபட்டு வெண்கொற்றக்குடை வெண்சாமரம் முதலிய வரிசைகளோடு யானைமீதிவர்ந்து நகர்வலஞ் செய்யும்பொழுது ஒரு வண்ணான் உவர்ப்பொதி சுமந்துகொண்டு வந்தான். அவனுடைய தேகத்தில் மழையினால் கரைந்த உவர் ஊறி வெளுத்திருந்தது. அக்காட்சியைக் கண்ட பெருமாக்கோதையார் அது சிவனாரது திருவேடமென நினைந்து யானையை விட்டிறங்கி அன்புடன் விரைந்து சென்று வணங்கினார். வண்ணான் மனங்கலங்கி அடியேன் அடி வண்ணான் என்றான். அடியேன் அடிச்சேரன் தேவரீர் திருநீற்றுத் திருவேடத்தை நினைப்பித்தீர். வருந்தாதே போம்: என்றார். சேரமான்பெருமாள் நாயனார்.

சேரர் பெருமான் தொழக் கண்டு
சிந்தை கலங்கி முன்வணங்கி
'யாரென் றடியே னைக்கொண்ட
தடியேன் அடிவண்ணான்'என்னச்
சேரர் பிரானும் 'அடிச்சேரன்
அடியேன், என்று "திருநீற்றின்
வார வேடம் நினைப்பித்தீர்வருந்தா
தேகும் எனமொழிந்தார்

நாயனுடைய அடியார்பத்தித் திறத்தைக் கண்ட மந்திரிமார் வணங்க யானைமீதேறி மாளிகையை யடைந்து அரசர்கள் போற்ற இராச்சிய பரிபாலனஞ் செய்தார். இக் காலத்தில் நடராசப்பெருமானுடைய திருவடி மீதுள்ள அன்பால் பூசனை புரிந்து பூசை முடிவில் திருச்சிலம்பொலி கேட்கும் வழக்கமுடையராயிருந்தார்.

### சுந்தரமூர்த்தி நாயனாரை நினைப்பித்தல்

இவ்வாறு நிகழுங் காலத்திலே சிவபெருமானுடைய திருமுகப் படிபாணபத்திரருக்குப் பல நிதிக்குவைகளைக் கொடுத்துப் பணித்தார். ஒரு நாள், பூசைமுடிவில் வழக்கமான திருச்சிலம்பொலி கேளாமையால் உயிர்துறக்கமுயலத் திருச்சிலம்பொலி கேட்டது. காலந் தாழ்ந்தமைக்குக் காரணம் கனகசபையிலே சுந்தரமூர்த்திநாயனாருடைய திருப்பாடல்களைக் கேட்டதாகச் சிவபிரான் திருவாய்மலர்ந்து அவரை நினைப்பித்தருளினார்.

அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனாரைத் தரிசிக்கும், விருப்பம் உண்டாகவே, அவரை அடைந்து அவருடன் வன்மீக நாதரை வணங்கி, வேதாரணியத்தையடைந்து சுவாமி தரிசனஞ்செய்து திருவந்தாதி பாடினார். பின்பு, சுந்தரமூர்த்திநாயனாருடன் கொடுங்கோளூரை யடைந்து வாழும நாட்களில் சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூருக்குச் செல்லப் பிரிவாற்றாதவராகி அவரை மறவாது அரசு செய்துகொண்டிருந்தார்.

### கணநாதர் ஆதல்

பின்னொருமுறை சுந்தரமூர்த்திநாயனார் கொடுங்கோளூருக்கு வந்து சேரமான் பெருமாள்நாயனாருடன் தங்கியிருக்கும்பொழுது ஒருநாள் திருவஞ்சைக்களத்திலே, சேரமான்பெருமாணாயனாரைநினைத்துக்கொண்டு வெள்ளையானை மீதேறித் திருக்கைலாசத்துக்குச் சென்றார். அதையறிந்த சேரமான் பெருமாணாயனார் ஒரு குதிரைமீதேறிக் குதிரையின் காதில் திருவைந்தெழுத்தை ஓதி ஆகாயத்திலே சென்று சுந்தரமூர்த்தி நாயனாருடைய வெள்ளை யானையை வலஞ்செய்து திருக்கைலாசமலையை அடைந்து சிவபெருமானை வணங்கிச் சுந்தரமூர்த்தி நாயனார் ஆலால சுந்தராக [illegible] தொண்டு செய்யத் [illegible] கணநாதராயினர்.

# கோயில் கொண்ட புலவர்களுட் சிலர்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

### சங்கப் புலவர்கள்

மதுரையிலே கடைச் சங்கத்திலே தமிழாராய்ந்த புலவர் நாற்பத்தொன்பதின்மர். அத்தனை பேருடைய திருவுருவச் சிலைகளும் மதுரைச் சங்கத்தவர் கோயிலிலுண்டு. அக்கோயிலிலே வணங்காமுடிப் பாண்டியனைச் சந்தித்த பொய்யா மொழிப் புலவர் அவனை நோக்கிப் பாட்டொன்று பாடினபோது, அவன் அவரிடத்து மதிப்பில்லாமல் அங்கு விக்கிரகவுருவாக விருக்கும் சங்கப் புலவரைச் சிரக்கம்பம் கரக்கம்பம் செய்யுமாறு பாடுவீரா என்று அவரைப்பார்த்து நகையாட அப் பொய்யாமொழிப் புலவர் அவைகளை நோக்கி ஒரு பாட்டுப் பாடினார். அதனைக் கேட்ட அச்சிலைகள் நாற்பத்தொன்பதும சிரக்கம்பம் கரக்கம்பம் செய்யலாயின.

அந்த நாற்பத்தொன்பதின்மருள்ளே தலைவராய் விளங்கியவர் நக்கீரர். திருமுருகாற்றுப்படை, நெடுநல் வாடை, கோபப்பிரசாதம், கைலைபாதி காளத்திபாதியந்தாதி, ஈங்கோய் மலையெழுபது முதலிய பிரபந்தங்களையும், நற்றிணை, குறுந்தொகை; புறநானூறு முதலிய பிரபந்தங்களிற் சிற்சில கவிகளையும் பாடியுள்ள அப்புலவர்கள் கோயில் கொண்டுள்ளது மதுரையில் மாத்திரமன்று. திருப்பரங்குன்றம், திருவீங்கோய் மலை என்னும் இடங்களிலும் அவரது திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

அத்தியற்புத அதிமதுர திவ்யமான திருப்பாடல்களினாலே தாம் கைக்கொண்டொழுகிவந்த சமயத்தையே யன்றித் தமிழ்வளத்தையும் பெருக்கி அழிவிலா இன்பவீடடைந்த சமயகுரவர், சந்தானகுரவர், நாயன்மார் பிறர், ஆழ்வார்மார், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், தாயுமானார் முதலான செந்தமிழ்ச் செல்வர் யாவருக்கும் தமிழ் வழங்குகின்ற நாடெங்கும கோயில்களும் மடாலயங்களும் பெருகியிருப்பது யாவருமறிந்ததே. சிவஞான முனிவர், சேக்கிழார் சுவாமிகள், ஐந்தாங்குரவர் எனப் போற்றப்படும ஆறுமுக நாவலர் ஆகிய இவர்களுடைய திருவுருவச் சிலைகளும் பிரதிஷ்டை செய்து பூசிக்கபபட்டு வருகின்றன.

இக்காலத்தில் அமரத்துவம் அடைந்து வருகின்ற புலவர்மாருக்கு ஆலயங்களுக்குப் பதிலாக ஞாபகசின்னங்கள், வித்தியாலயம் புத்தகாலயம், வாசிகசாலை, பிரதிமைப் படங்கள் முதலான பிறவுருவங்களிலே அமைக்கப்பட்டு வருகின்றன. அமரகவி பாரதியார், சுவாமி விபுலானந்தர் முதலானோரைத் தமிழ் நாடு பூஜிக்கும் விதம காண்க.

மக்களுயிர்க்கு உறுதியளிக்கும் நூல்களை யளித்த புலவர் யாவரும் எங்கட்கு இறைவனேயாம். எழுத்தறிவித்தவன் இறைவனாகும்.

## கற்றவர்க்கழகு கசடற மொழிதல்

அன்ன தன்மையில் இருவரும்
பணிந்தெழுந் தருள்தலைமேற்
கொண்டு
மன்னும் வன்றொண்டர் ஆலால
சுந்தரர் ஆகித் தாம் வழுவாத
முன்னை நல்வினைத் தொழில்தலை
நின்றனர் முதற்சேரர் பெருமா
னும்
[illegible]
[illegible]
பூண்டார்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான ருணிமார்க்ஓடுகள் $13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய

சி. எம். சாமி




உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதிஅற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும.

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

குரு பஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday. August 1. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org